**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________
   (Name) ____________________________
2. (Signature) ____________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : ........................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.________________________________
(In words)

**J 2 6 1 0**

**Test Booklet No.**

Time : **1 $^1/_4$** hours]

**PAPER-II**

**TAMIL**

[Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **12**

Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered in the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.
   **Example :** (A) (B) ● (D)
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **Answer Sheet given inside the Paper I Booklet only.** If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and OMR Answer sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण :** (A) (B) ● (D)
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये उत्तर-पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं OMR उत्तर-पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई अंक काटे नहीं जाएँगे ।**

**TAMIL**
தமிழ்
**Paper-II**
தாள்-II

**Note** : This paper contains **fifty (50)** multiple choice questions, each question carrying **two (2)** marks. Attempt **all** the questions.

**குறிப்பு** : இந்த வினாத்தாள் ஐம்பது (50) விடைதெரி வினாக்கள் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் இரண்டு (2). அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் எழுதியவர் -
   (A) இளம்பூரணர் (B) சேனாவரையர்
   (C) பனம்பாரனார் (D) பேராசிரியர்

2. ‘செம்புலப்பெயர் நீர் போல’ - இவ்வடி இடம்பெறும் நூல் -
   (A) நற்றிணை (B) கலித்தொகை
   (C) ஐங்குறு நூறு (D) குறுந்தொகை

3. களவழி நாற்பது இயற்றியவர் -
   (A) கணிமேதாவியார் (B) முன்றுறையரையனார்
   (C) பொய்கையார் (D) நல்லந்துவனார்

4. உரிஇயல் இடம் பெறும் இடம் -
   (A) எழுத்ததிகாரம் (B) சொல்லதிகாரம்
   (C) பொருளதிகாரம் (D) யாப்பதிகாரம்

5. இனியவை நாற்பது நூலாசிரியர் -
   (A) பூதஞ்சேந்தனார் (B) கபிலர்
   (C) நல்லாதனார் (D) கூடலூர் கிழார்

6. திருக்குறள் அறத்துப் பாலில் இடம் பெற்றுள்ள பாக்களின் எண்ணிக்கை -
   (A) 300 (B) 200
   (C) 380 (D) 250

7. பெருந்திணையின் புறனாக அமைவது -
   (A) வஞ்சி (B) காஞ்சி
   (C) வாகை (D) வெட்சி

8. திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது -
(A) மராத்தி (B) வங்காளி
(C) இந்தி (D) பிராகுவி

9. பத்தாம் திருமுறை -
(A) பெரியபுராணம் (B) திருமந்திரம்
(C) திருவாசகம் (D) அற்புதத் திருவந்தாதி

10. பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தைப் பாடியவர் -
(A) அரிசில் கிழார் (B) கபிலர்
(C) குமட்டூர் கண்ணனார் (D) பரணர்

11. குயில்பத்தைப் பாடியவர் -
(A) பாரதியார் (B) மாணிக்கவாசகர்
(C) சுந்தரர் (D) பாரதிதாசன்

12. 'கள்ளோ? காவியமோ?'- எழுதியவர்
(A) அகிலன் (B) மு.வரதராசன்
(C) காண்டேகர் (D) ஜெயகாந்தன்

13. 'எழுத்து' இதழைத் தொடங்கியவர் -
(A) வானமாமலை (B) பி.எஸ்.இராமையா
(C) சங்கு சுப்பிரமணியம் (D) சி.சு.செல்லப்பா

14. 'என் சரித்திரம்' எழுதியவர் -
(A) நாமக்கல் கவிஞர் (B) உ.வே.சா.
(C) திரு.வி.க. (D) கவிமணி

15. அண்ணாதுரை எழுதிய நாடக நூல் -
(A) ஓர் இரவு (B) பராசக்தி
(C) சுலோசனாசதி (D) இரத்தக்கண்ணீர்

16. விருத்தம் எனும் பாவகையில் எழுதப்பட்ட முதல் காப்பியம் -
(A) சிலப்பதிகாரம் (B) மணிமேகலை
(C) சீவகசிந்தாமணி (D) பெருங்கதை

17. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் எழுதியவர் -
(A) குமரகுருபரர் (B) அருணகிரிநாதர்
(C) தாயுமானவர் (D) வள்ளலார்

18. ஆட்டனத்தி ஆதிமந்தி இயற்றியவர் -
(A) வண்ணதாசன் (B) சுரதா
(C) கண்ணதாசன் (D) வைரமுத்து

19. "சொன்னால் விரோதம் இது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ" - பாடியவர்
(A) பூதத்தாழ்வார் (B) நம்மாழ்வார்
(C) இராமாநுஜர் (D) பேயாழ்வார்

20. அப்துல் ரகுமான் எழுதியது -
(A) பால் நிலவு (B) பால் வீதி
(C) பாலும் பாவையும் (D) பாற்கடல்

21. <u>உறுதிக்கூற்று</u>: சங்க இலக்கியம் செவ்வியல் இலக்கியம்.
<u>காரணம்</u>: பழமையும் உயரிய கவிதைச் சிறப்பும் கொண்டது.
(A) உ.கூ. + கா : இரண்டும் சரி
(B) உ.கூ. சரி: கா: சரியன்று
(C) உ.கூ. : கா: இரண்டும் சரியல்ல
(D) கா. சரி : உ.கூ. சரியன்று

22. <u>உறுதிக்கூற்று</u>: இறைச்சி என்பது அகப்பொருள் இலக்கணம்.
<u>காரணம்</u>: இது புறப்பொருளை எடுத்துரைப்பதில்லை.
(A) கா. சரியன்று. உ.கூ. சரி
(B) உ.கூ. சரி : கா. சரியன்று
(C) உ.கூ. + காரணம் இரண்டும் சரியல்ல
(D) உ.கூ. + கா. இரண்டும் சரி

23. <u>உறுதிக் கூற்று</u>: சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள்.
<u>காரணம்</u>: இரண்டும் ஒரே சமயத்தைச் சார்ந்தவை.
(A) உ.கூ. சரி : கா. சரியன்று
(B) உ.கூ. + கா. இரண்டும் சரி
(C) கா. சரி . உ.கூ. சரியன்று
(D) உ.கூ. + கா : இரண்டும் சரியல்ல

24. <u>உறுதிக்கூற்று</u>: பள்ளு இலக்கியம் அக்கால சமுதாயத்தைச் சித்திரிப்பது.
<u>காரணம்</u>: மக்களையும் கடவுளையும் பாடியுள்ளதால்.
(A) உ.கூ. சரி. கா. சரியன்று
(B) உ.கூ. + கா. இரண்டும் சரி
(C) உ.கூ. சரியன்று. கா. சரி
(D) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல

25. உறுதிக்கூற்று: பாசவதைப்பரணி ஒரு போரிலக்கியம்.
காரணம்: தமிழர் போர்மரபுகளைக் கூறுவதால்.
(A) உ.கூ. சரியன்று. கா.சரி
(B) உ.கூ. + கா. இரண்டும் சரி
(C) உ.கூ. சரி. கா. சரியன்று
(D) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல

26. உறுதிக்கூற்று: திருமுருகாற்றுப்படை ஓர் ஆற்றுப்படை நூல்.
காரணம் : பரிசில் பெற்ற புலவன் பொன்னும் பொருளும் வேண்டி ஆற்றுப்படுத்துவதால்.
(A) உ. கூ. சரி. கா. சரியன்று (B) உ.கூ. சரியன்று. கா. சரி
(C) உ.கூ. + கா. இரண்டும் சரி (D) கா. சரி. உ.கூ. சரியன்று

27. உறுதிக்கூற்று: ஒப்பாரி எனப்படுவது நாட்டுப்புறப் பாடல் வகை.
காரணம்: பிறருக்கு ஒப்பார் யார் என ஒப்புமைப் படுத்திப் பாடுவது.
(A) உ.கூ. + கா. : இரண்டும் சரியல்ல
(B) உ.கூ. + கா: இரண்டும் சரி
(C) உ.கூ. சரியன்று. கா. சரி
(D) உ.கூ. சரி. கா. சரியன்று

நிரல் படுத்துக.
28. எழுத்திலக்கணத்தின் அமைப்பு முறை.
(A) எண், பெயர்,முறை,பிறப்பு (B) பிறப்பு,பெயர்,எண், முறை
(C) முறை,எண்,பெயர், பிறப்பு (D) முறை,பிறப்பு,எண், பெயர்

நிரல் படுத்துக:
29. சைவசித்தாந்த மரபு-
(A) பசு,பாசம்,பதி (B) பாசம்,பதி,பசு
(C) பதி,பாசம்,பசு (D) பதி,பசு,பாசம்

நிரல் படுத்துக:
30. ஐந்திலக்கண வரிசை -
(A) சொல்,எழுத்து, பொருள்,அணி,யாப்பு
(B) எழுத்து,சொல், பொருள்,யாப்பு,அணி
(C) யாப்பு,அணி, எழுத்து, சொல்,பொருள்
(D) பொருள், யாப்பு, அணி, சொல், எழுத்து

நிரல் படுத்துக:
31. உரிப் பொருள்கள் வரிசை -
(A) புணர்தல்,பிரிதல், இருத்தல்,இரங்கல்,ஊடல்
(B) இருத்தல்,பிரிதல், இரங்கல்,ஊடல்,புணர்தல்
(C) பிரிதல்,இரங்கல், இருத்தல்,ஊடல்,புணர்தல்
(D) ஊடல்,பிரிதல், இரங்கல், புணர்தல்,இருத்தல்

நிரல் படுத்துக:

**32.** பெரும் பொழுதுகள் -

(A) இளவேனில்,பின்பனி, முன்பனி,கூதிர்,கார்

(B) பின்பனி,முன்பனி, கூதிர்,கார்,இளவேனில்

(C) கார்,கூதிர், முன்பனி, பின்பனி,இளவேனில்

(D) கூதிர்,கார், இளவேனில்,முன்பனி, பின்பனி

நிரல் படுத்துக:

**33.** இளிவரல் நான்காவன -

(A) மென்மை,வருத்தம், பிணி, மூப்பு

(B) மூப்பு,பிணி, வருத்தம், மென்மை

(C) மூப்பு,மென்மை, வருத்தம்,பிணி

(D) பிணி,மென்மை, வருத்தம், மூப்பு

நிரல் படுத்துக:

**34.** நாற்பொருள்கள் -

(A) வீடு,பொருள், இன்பம், அறம்

(B) அறம்,வீடு,இன்பம், பொருள்

(C) பொருள்,வீடு, அறம், இன்பம்

(D) அறம், பொருள், இன்பம், வீடு

நிரல் படுத்துக:

**35.** தேவாரம் பாடிய மூவர் -

(A) சம்மந்தர்,அப்பர், சுந்தரர் (B) சுந்தரர்,அப்பர், சம்மந்தர்

(C) அப்பர்,சுந்தரர், சம்மந்தர் (D) அப்பர்,சம்மந்தர், சுந்தரர்

நிரல் படுத்துக:

**36.** முதல் மூன்று நாவலாசிரியர்கள் -

(A) வேதநாயகம் பிள்ளை, மாதவையர், இராஜம் ஐயர்

(B) மாதவையர், இராஜம் ஐயர்,வேதநாயகம் பிள்ளை

(C) இராஜம் ஐயர், வேதநாயகம் பிள்ளை, மாதவையர்

(D) வேதநாயகம் பிள்ளை, இராஜம் ஐயர், மாதவையர்

**37.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தமிழ்க்காதல் | – 1. | தெ.பொ.மீ. |
| (b) | கானல் வரி | – 2. | ஆ.முத்துசிவன் |
| (c) | அசலும் நகலும் | – 3. | எஸ்.வையாபுரிப் பிள்ளை |
| (d) | காவிய காலம் | – 4. | வ.சுப. மாணிக்கம் |

சரியான விடையைத் தெரிவு செய்க.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

38. பொருத்துக :

(a) இராமலிங்க சுவாமிகள் – 1. புரட்சிக் கவிஞர்
(b) திருஞான சம்மந்தர் – 2. வள்ளலார்
(c) பாரதிதாசன் – 3. பொய்யா மொழிப்புலவர்
(d) திருவள்ளுவர் – 4. திராவிட சிசு

சரியான விடையைத் தெரிவு செய்க.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

39. பொருத்துக :

(a) 'செய்பவன் கருவிநிலம் செயல்காலம் செய்பொருள் ஆறும் தருவது வினையே' – 1. தண்டியலங்காரம்
(b) 'குறிப்பே ஏவல் தற்சுட் டல்வழி தனிக்குறில் மொழிமுதல் தனியசை இலவே' – 2. நன்னூல்
(c) 'தெரிபு வேறு கிளவாது குறிப்பினும் தொழிலினும் அரிதுணர் வினைத்திறம் நுட்பம் ஆகும்' – 3. இறையனார் அகப்பொருள்
(d) 'எல்லாவயினும் கிழவோன் பிரிவையிற் பல்லாற்றானும் வன்புறை குறித்தன்று' – 4. யாப்பருங்கலம்

சரியான விடையைத் தெரிவு செய்க.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

40. பொருத்துக :

(a) இலக்கிய விமரிசனம் – 1. அ.ச.ஞானசம்பந்தன்
(b) விமர்சனக்கலை – 2. தொ.மு. சிதம்பர ரகுநாதன்
(c) இலக்கியக் கலை – 3. மு. வரதராசன்
(d) இலக்கிய மரபு – 4. க.நா. சுப்பிரமணியன்

சரியான விடையைத் தெரிவு செய்க.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

**41.** <u>பொருத்துக :</u>

(a) பால பாரதி – 1. நா. பார்த்தசாரதி

(b) தீபம் – 2. கோமல் சுவாமிநாதன்

(c) மணிக்கொடி – 3. வ.வே.சு. ஐயர்

(d) சுபமங்களா – 4. கே. சீனிவாசன்

<u>சரியான விடையைத் தெரிவு செய்க.</u>

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

**42.** <u>பொருத்துக :</u>

(a) சங்கரதாஸ் சுவாமிகள் – 1. வெறியாட்டம்

(b) பரிதிமாற் கலைஞர் – 2. சிறுத் தொண்டர்

(c) சே. இராமானுஜன் – 3. மழை

(d) இந்திரா பார்த்தசாரதி – 4. மான விஜயம்

<u>சரியான விடையைத் தெரிவு செய்க.</u>

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**43.** <u>பொருத்துக :</u>

(a) மலரும் மாலையும் – 1. வைரமுத்து

(b) இன்னொரு தேசிய கீதம் – 2. கவிமணி

(c) ஊர்வலம் – 3. சுரதா

(d) தேன்மழை – 4. மு.மேத்தா

<u>சரியான விடையைத் தெரிவு செய்க</u>

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

**44.** பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | ஜெயகாந்தன் | – | 1. | கோபல்லகிராமம் |
| (b) | கி.ராஜநாராயணன் | – | 2. | தண்ணீர் |
| (c) | அசோகமித்திரன் | – | 3. | குருதிப்புனல் |
| (d) | இந்திரா பார்த்த சாரதி | – | 4. | ஈஸ்வர அல்லா தேரே நாம் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**45.** பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | குமரிமலர் | – | 1. | சுந்தர ராமசாமி |
| (b) | சுதேசமித்திரன் | – | 2. | பரிதிமாற் கலைஞர் |
| (c) | ஞான போதினி | – | 3. | ஏ.கே.செட்டியார் |
| (d) | காலச்சுவடு | – | 4. | ஜி.சுப்பிரமணிய ஐயர் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**46.** பொருத்துக :

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | அகநானூறு | – | 1. | பதினெண் கீழ்க்கணக்கு |
| (b) | சிறுபஞ்சமூலம் | – | 2. | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் |
| (c) | கலிங்கத்துப் பரணி | – | 3. | சங்க இலக்கியம் |
| (d) | நாச்சியார் திருமொழி | – | 4. | சிற்றிலக்கியம் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

கீழ்வரும் உரைநடைப் பகுதியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடை அளிக்கவும்.

கல்வி பயிலும் உரிமை சங்க காலத்தில் தனிப்பட்ட ஒரு சிலரின் உரிமையாக இருந்ததில்லை. எக்குலத்தைச் சார்ந்தவர்களும் செல்வர்களும் வறியோரும் மன்னரும் எளிய குடிமக்களும் ஆகிய ஆண்களும் பெண்களும் கல்வியைத் தேடிப் பெற்றனர். இளைஞர்கள் மணமான பிறகும் தங்கள் மனைவியைப் பிரிந்து சென்றேனும் கல்வி கற்பதுண்டு. இளமையிலேயே கல்விப் பயிற்சி தொடங்கிற்று என்பதனை, ‘இளமையிற் கல்’ என மூதுரை எடுத்துக் காட்டுகிறது. அறிஞர் அமர்ந்திருந்த ஓரவையின் முன்னணியில் அமர்த்தப் பெறும் வாய்ப்பைத் தம் மகனுக்கு ஒவ்வொரு தந்தையும் தேடிக் கொடுக்க வேண்டும் என்பது தமிழர் கண்ட அறம். குல வேறுபாடு நோக்காமல் மக்கள் அனைவருமே கல்விப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். கல்விப் பயிற்சிக்கு வறுமை நேர்ப்பகையாகும்.

ஒவ்வோர் ஊரிலும் பள்ளிகள் நடைபெற்று வந்தனவா என்பதும் பள்ளிகளில் எத்தனை மாணவர்கள் பயின்றனர் என்பதும் தெரிந்து கொள்வதற்கான சான்றுகள் இல்லை. ஒவ்வோர் ஊரிலும் கல்வி பயிற்றும் கணக்காயர் இருந்தனர். ‘கணக்காயர் இல்லாத ஊரும் ...... நன்மை பயத்தல் இல’ என்று நூல்கள் கூறுகின்றன. கிடங்கில் குலபதி நக்கண்ணனார் என்றொரு சங்கப் புலவர் இருந்தார். ஆயிரவருக்கு மேற்பட்ட மாணவர்களை ஒன்று கூட்டி அவர்கட்கு அவர் கல்வி பயிற்று வந்தார் என அறிகின்றோம். பதினாயிரம் மாணவர்கட்குக் கற்பித்தவர்கட்குத்தான் குலபதி எனும் பட்டம் உரிமையாகும். கல்வி பயிற்றப்பட்ட இடம் பள்ளி எனப்பட்டது. பெரும்பாலும் திண்ணைகளிலேயே பள்ளிகள் நடைபெற்று வந்தன. கல்வியின் பயன் கடவுளை அறிதலே என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டது. பலகுலத்தைச் சார்ந்த புலவர்கள் தமிழகமெங்கும் உலவி வந்ததையும் மன்னர் உதவியுடன் மதுரையில் அவர்கள் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்து வந்ததையும் நோக்குங்கால் அப்புலவர்கள் பாடிய பாடல்களைக் கேட்டும் கற்றும் அவற்றின் பொருளுணர்ந்தும் வாழ்ந்து வந்த பொதுமக்கள் நாடெங்கும் நிரம்பி இருந்தனர்.

ஆசிரியர்களுக்குப் பொருள் கொடுத்தும் தொண்டுகள் புரிந்தும் மக்கள் கல்வி பயின்றனர். எனினும் கபிலர், பரணர், திருவள்ளுவர், நக்கீரர் போன்ற பெரும் புலவர் சங்க காலத்தில் வாழ்ந்து வந்தனர். ஒருவருடைய புலமையை அறிஞர்கள் எளிதில் ஒப்புக் கொள்வதில்லை. அவருடைய பாடல்களோ நூல்களோ தமிழ்ச்சங்கத்தார் முன்பு அரங்கேற்றம் பெற வேண்டும். சங்கப் புலவர்கள்அப்புலவரைப் புலமை நிரம்பிய சான்றோன் என ஒருங்கே ஒப்புக் கொள்ள வேண்டும்.

47. <u>உறுதிக்கூற்று:</u> சங்க காலத்தில் கல்வி பயிலும் உரிமை எல்லோருக்கும் உரியது.

<u>காரணம்:</u> செல்வர், வறியவர், மன்னர் என்போர் கல்வியைத் தேடிப் பெற்றனர்.

(A) உ.கூ. + கா. : இரண்டும் சரி

(B) உ.கூ. சரி. கா. சரியன்று

(C) கா. சரி. உ.கூ. சரியன்று.

(D) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல

48. பதினாயிரம் மாணவர்கட்குக் கற்பித்தவர்களுக்கு வழங்கும் பட்டம்.

(A) ஏனாதி (B) தளபதி

(C) அதிபதி (D) குலபதி

<u>நிரல் படுத்துக :</u>

49. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள புலவர்களை நிரல்படுத்துக.

(A) பரணர்,கபிலர்,நக்கீரர்,திருவள்ளுவர்

(B) கபிலர்,பரணர்,திருவள்ளுவர்,நக்கீரர்

(C) நக்கீரர்,பரணர்,கபிலர்,திருவள்ளுவர்

(D) திருவள்ளுவர்,நக்கீரர்,கபிலர்,பரணர்

50. <u>பொருத்துக :</u>

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | தமிழர் கண்ட அறம் | – | 1. | கணக்காயர் |
| (b) | கல்விக்கு நேர்ப்பகை | – | 2. | அவையில் முந்தியிருக்கச் செய்தல் |
| (c) | கல்வி பயிற்றுபவர் | – | 3. | மூதுரை |
| (d) | இளமையில் கல் | – | 4. | வறுமை |

<u>சரியான விடையைத் தெரிவு செய்க</u>

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

**Space For Rough Work**